DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No. 71/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | மோகன்ராஜ் | Age | : | 25 |
| F/N | : | ரவிச்சந்திரன் | Occupation | : | வெல்டிங் வேலை |
| Village | : | கும்பரம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 14th day of October 2024.

**14.10.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கும்பரத்தில் குடியிருந்து கொண்டு வெல்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். **(சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்)**. கடந்த 16.09.2021-ம் தேதி இரவு 10.15 மணிக்கு நானும், என் அப்பா ரவிச்சந்திரன் மற்றும் என் அண்ணன் ரஞ்சித்குமார் ஆகியோர்கள் எங்களுக்கு சொந்தமான TN 65 AC 7615 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தில் பட்டிணம்காத்தான் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட்டுவிட்டு பெட்ரோல் பங்கை விட்டு வெளியே வந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை கடக்கும்போது இராமேஸ்வரத்தில் இருந்து இராமநாதபுரம் நோக்கி TN 65 S 4934 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ட்ரீம் என்ற இருசக்கர வாகனத்தை ஆஜர் எதிரி ஓட்டி வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். அதில் என் அப்பாவிற்கு பின் தலையிலும், இடது புருவத்திலும், காலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது அப்பாவை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு பரிசோதித்த மருத்துவர் மதுரைக்கு அழைத்து செல்லும்படி அறிவுறுத்தினார். அதன்பேரில் நாங்கள் ஆம்புலன்ஸில் மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு எனது அப்பாவை பரிசோதித்த மருத்துவர் என் அப்பா இறந்துவிட்டார் என்று கூறினார். பின்னர் மறுநாள் கேணிக்கரை காவல்நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** நான், அப்பா மற்றும் அண்ணன் ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் செல்லக்கூடாது என்றால் சரிதான். சம்பவமானது இருட்டான நேரத்தில் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் எனது அப்பாவிற்கும், அண்ணனுக்கும் என்ன ஆனது என்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டியது என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியை பற்றி போலீசார் சொல்லி தான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். புகார்மனுவில் எங்களுடன் எனது அண்ணன் வந்த விவரத்தை பதட்டத்தில் குறிப்பிடாமல் விட்டுவிட்டேன்.

**2.** மூன்று நபர்கள் இருசக்கர வாகனத்தில் சென்று விபத்து ஏற்பட்டால் நஷ்ட ஈடு பெற முடியாது என்பதால் இரண்டு நபர்கள் சென்றதாக புகார்மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் புகார்மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார்கொடுக்கும்போது என்னுடன் என் அண்ணன் வந்தாரா என்றால் இல்லை. நான் சம்பவ தினத்தன்று கவனக்குறைவாக சாலையை கடந்தேன் என்றால் அந்த சமயத்தில் ரோட்டில் மூன்று லாரிகள் நின்றுகொண்டிருந்தது அதனால் எதிரில் வந்த வண்டியை நான் கவனிக்கவில்லை. நஷ்ட ஈடு பெறுவதற்காக இந்த வழக்கை எதிரி மீது தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

**(ஒப்பம்/-க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 71/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | உமேஷ்பாபு | Age | : | 25 |
| F/N | : | பால்ச்சாமி | Occupation | : | எலக்ட்ரீசியன் |
| Village | : | பழனிவலசை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 14th day of October 2024.

**14.10.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் பழனிவலசையில் குடியிருந்து கொண்டு எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். **(சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்)**. அ.சா.1 எனது நண்பர் ஆவார். கடந்த 16.09.2021-ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் நானும், எனது மாமா ரங்கீஷ் என்பவரும் இரவு வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் ஈசிஆர் ரோட்டில் ராம்நகர் பெட்ரோல் பங்க் அருகே சென்றுகொண்டிருந்தோம். அப்போது அ.சா.1, அவரது அப்பா மற்றும் அண்ணன் ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட்டுவிட்டு வெளியே வரும்போது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை இராமேஸ்வரத்தில் இருந்து இராமநாதபுரம் நோக்கி ஓட்டி வந்து அ.சா.1 ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். அ.சா.1ன் அப்பாவிற்கு பின் தலையிலும், இடது புற புருவத்திலும் காயங்கள் ஏற்பட்டன. உடனே அவரை ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அ.சா 1 அழைத்து சென்றார். அதன்பிறகு அ.சா.1ன் அப்பா இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எனது ஊர் சித்தார்கோட்டை அருகில் உள்ள பழனி வலசை ஆகும். நான் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். நான் காலை 08.00 மணிக்கு வேலைக்கு சென்று இரவு 10.00 மணிக்கு வீட்டிற்கு வருவேன். சம்பவ தினத்தன்று இராமநாதபுரத்தில் வேலை பார்த்தேன். சம்பவமானது நாங்கள் வீட்டிற்கு செல்லும்போது நடந்தது. ஆஜர் எதிரியை சம்பவ தினத்தன்று சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். சம்பவம் நடக்கும்போது நான் சம்பவ இடத்திற்கு

அருகே இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தேன். சம்பவம் நடந்த பிறகு நிறைய நபர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடம் சம்பவ சமயத்தில் இருட்டாக இருந்தது என்றால் சரிதான்.

2. சம்பவ சாலையில் நிறைய வாகனங்கள் வந்துபோகும் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் இறந்த நபர் எனது நண்பரின் தந்தை என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 தேசிய நெடுஞ்சாலையை இருசக்கர வாகனத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி கடக்கும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் நான் எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் சம்பவத்திற்கு பிறகு காவல்நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள் அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரி கீழே விழுந்து கரைபட்ட ஆடையுடன் சம்பவ இடத்தில் இருந்தார். முதல், முதலில் ஆஜர் எதிரியை தற்போது தான் பார்க்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 71/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | தங்கச்சாமி | Age | : | 57 |
| F/N | : | முனியாண்டி | Occupation | : | அரிசி வியாபாரம் |
| Village | : | கும்பரம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 14th day of October 2024.

**14.10.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கும்பரத்தில் குடியிருந்து கொண்டு அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 17.09.2021–ம் தேதி காலை 07.30 மணியளவில் நானும், முனியராஜ் என்பவரும் பட்டிணம்காத்தான் பெட்ரோல் பங்க் அருகே ரவிச்சந்திரன் என்பவர் வாகன விபத்து ஏற்பட்டு இறந்த இடத்தை பார்த்துக்கொண்டிருந்த போது கேணிக்கரை காவல்நிலைய போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், முனியராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். (**பார்வைமகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் இறந்த நபர் எனது அக்கா மகன் ஆவார். நான் சம்பவ இடத்தில் வைத்து ஒரு கையெழுத்து செய்தேன். பார்வைமகஜரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பார்வைமகஜர் ராம் நகரில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே தயார் செய்யப்பட்டது. சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்து, எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பார்வைமகஜரில் என்ன எழுதியிருந்தது என்ற முழு விவரத்தையும் தற்போது சொல்ல முடியுமா என்றால் தற்போது சொல்ல முடியாது. பார்வைமகஜரை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். இறந்த நபர் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் வைத்து

கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிதான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பெட்ரோல் பங்க் அருகே கடைகள் உள்ளதா என்றால் எதிரில் கடைகள் உள்ளது. எத்தனை கடை உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை – இல்லை**

(ஒப்பம்/–க. பிரபாகரன்)
நீதித்துறை நடுவர் எண்.2
இராமநாதபுரம்